# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூலை 14, 2024

Weekly E-paper ● July 14, 2024




## விக்கிரவாண்டி

# சிலிர்த்து எழுந்த திமுகவும் சிதைந்து வீழ்ந்த சீமானும்!

சுப. வீரபாண்டியன்

**கலைஞரை இழிவு செய்யும் கயவர்களே எச்சரிக்கை!**

பொ.ஆ

**மனிதநேயர் புத்தர்!**

தலையங்கம்

**இயக்கச் செய்திகள்**

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூலை 14, 2024 Weekly E-paper ● July 14, 2024


**விக்கிரவாண்டி**

# சிலிர்த்து எழுந்த திமுகவும் சிதைந்து வீழ்ந்த சீமானும்!

**சுப. வீரபாண்டியன்**

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு, இந்தியாவில் பல மாநிலங்களில் நடைபெற்ற 13 இடைத்தேர்தல்களின் முடிவுகள் வந்திருக்கின்றன. அவற்றுள் 10 இடங்களில் இந்தியா கூட்டணியும், ஓரிடத்தில் சுயேச்சையும் வெற்றி பெற்று இருக்கிறார்கள். இரண்டே இரண்டு இடங்களில் பாஜக தப்பிப் பிழைத்திருக்கிறது!

தமிழ்நாட்டின் விக்கிரவாண்டித் தொகுதியில் திமுகவின் வெற்றி தொடர்கதை ஆகியிருக்கிறது! எதிர்பார்த்த வெற்றிதான் என்றாலும், எதிர்பாராத அளவிற்கு வாக்கு வித்தியாசத்தில் திமுகவின் வெற்றி அமைந்துள்ளது.

2021 பொதுத் தேர்தலில் 9,500 வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே வெற்றி பெற்றிருந்த திமுக கழகம், இப்போது 67,000 வாக்குகளுக்கும் கூடுதலான வித்தியாசத்தில் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது! கடந்த மூன்று ஆண்டு கால ஆட்சிக்கு மக்கள் தந்துள்ள பாராட்டுப் பத்திரம் என்று இதனைக் கொள்ளலாம்!




அதிமுக, தேமுதிக ஆகிய கட்சிகள் இந்தத் இடைத்தேர்தலில் போட்டியிடவில்லை. தேர்தலைப் புறக்கணிக்கும் படி அக்கட்சிகளின் தலைவர்கள் கூறியிருந்தார்கள். ஆனாலும் 84.2 வாக்குகள் பதிவாகியுள்ளன என்றால், தலைமையின் பேச்சைப் புறந்தள்ளிவிட்டு அதிமுகவினர் தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

அவர்கள் எந்தக் கட்சிக்கு வாக்களித்திருக்கக் கூடும்? பாமகவினர் தங்களின் சுவரொட்டி, பதாகைகளில் ஜெயலலிதா படத்தையும் பொறித்திருந்தார்கள். சீமானோ, தேர்தலில் போட்டியிடாத நீங்கள் எங்கள் கட்சிக்கு வாக்களியுங்கள் என்று காலில் விழாத குறையாகக் கெஞ்சினார். ஆனால் விழுந்திருக்கும் வாக்குகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் இருவருக்குமே அதிமுகவினர் வாக்குகள் போய்ச் சேரவில்லை என்று புரிகிறது. அதிமுகவின் பெரும் பகுதியினர் திமுகவிற்கே வாக்களித்திருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது!

தேர்தல் நேரத்தில் எப்படியாவது ஒரு கலவரத்தை உருவாக்கி விடச் சீமான் கட்சியினர் முயற்சி செய்தார்கள். திமுகவினர் கூடி நிற்கும் இடங்களுக்குத் திரும்பத் திரும்பப் போய் வாக்கு கேட்டார்கள். ஏதேனும் ஒரு கலவரம் வந்து விடாதா என்று ஏங்கினார்கள். ஆனால் அப்படி எதுவும் நடைபெறவில்லை.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# கலைஞரை இழிவு செய்யும் கயவர்களே எச்சரிக்கை!



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களைத் தரக்குறைவான சொற்களால், பாட்டு பாடியும், ஏசிப்பேசியும் வரும் சீமான் உள்ளிட்ட அவர் கட்சியினருக்கு எச்சரிக்கை விடும் வகையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் 12.7.2024 அன்று சென்னை, அன்பகத்தில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. பேரவையின் தலைவர் தோழர் சுபவீ ஒரு மணி நேரம் கடுமையான கண்டன உரையை ஆற்றினார்.

வழக்கமாக அமைதியாகவும், நிதானமாகவும், புள்ளி விவரங்களுடனும் பேசும் அவர், அன்று தன்னுடைய இன்னொரு முகத்தைக் காட்டும் வகையில், கடும் சீற்றத்துடன் உரையாற்றினார். அது ஓர் அறச்சீற்றம்!

இதுபோன்ற பேச்சுக்களையும், ஏச்சுக்களையும் ஏராளமாகத் தலைவர் கலைஞர், தான் வாழ்ந்த காலத்திலேயே பார்த்திருக்கிறார். இவையெல்லாம் ஒரு செடியின் வேரில் வீசப்படுகிற சாணமும், மலமும் போல! அவற்றை உரமாக்கிக் கொண்டு அந்தச் செடி வளர்ந்து மரமாகும். நானும் அப்படித்தான் என்று சொன்னவர் கலைஞர்!

இதோ தரக்குறைவான சொற்களால் நான் கலைஞரைப் பற்றிப் பாடுகிறேன். முடிந்தால் என்னைக் கைதுசெய் என்று சவால் விட்ட சீமானுக்கு, அந்த மேடையில் இன்னொரு சவாலை சுபவீ அரங்கேற்றினார்.

விஜயலட்சுமி என்று ஒரு பெண் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக, வலையொளிகளில் இந்தச் சீமானை மிகத் தரக்குறைவாக, மானங்கெடப் பேசி வருகிறார். "சீமானே, உனக்குத் தைரியம் இருந்தால், அந்தப் பெண் மீது வழக்குப் போடு. இல்லையென்றால், அதை எடுத்து இந்த மேடையில் பேசியிருக்கும் என் மீதாவது வழக்குப் போடு. சந்திக்க நான் தயார். நீ தயாரா?" என்று கேட்டார்.

இனிமேல் எங்காவது தலைவர் கலைஞரைப் பற்றி சீமான் பேசினால், விஜயலட்சுமியின் காணொளியை அதற்குப் பதிலாக ஒளிபரப்புங்கள் என்றும் திமுகவினரை அவர் கேட்டுக் கொண்டார்.

ஒரு மணி நேரம் அன்று அவர் ஆற்றிய உரை, கலைஞர் செய்திகள் தொலைக் காட்சியில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. இப்போதும் பல்வேறு வலையொளிகளில் பல லட்சம் மக்களிடம் சென்று பரவிக் கொண்டிருக்கிறது.

"அண்ணாவின் வழி நின்று, அறமான வழி செல்லும் அதிமேதை கருணாநிதி!

குண்டேந்தும் பீரங்கி வந்தாலும் கொள்கை மாறாத கருணாநிதி! சீராளன் கருணாநிதி! அன்புப் பேராளன் கருணாநிதி! கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே!" என்னும் பாடல் வரிகளோடு, அவர் தன் உரையை நிறைவு செய்தார்.

– பொ.ஆ

---

முன்பக்கத் தொடர்ச்சி

*15 நாள்களும் அந்தத் தொகுதியிலேயே தங்கி, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊரில் பொதுக்கூட்டம் போட்டுச் சீமான் பேசினார். என்னென்னவோ வித்தைகள் எல்லாம் செய்து பார்த்தார். கடைசியில் வழக்கம் போல் கட்டுத்தொகையை (Deposit) இழந்தது மட்டும்தான் மிச்சம்!*

*நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் 8.2 விழுக்காடு வாக்குகளைச் சீமான் கட்சியினர் பெற்றிருந்தார்கள். பாருங்கள், விக்கிரவாண்டியில் அது பத்தாகும், அடுத்த 12 விழுக்காடு என்று கற்பனைக் கோட்டைகளை கட்டி முடித்தார்கள். ஆனால் இப்போது விக்கிரவாண்டியில் அவர்கள் 5.4 விழுக்காடு வாக்குகளை மட்டுமே பெற்று இருக்கிறார்கள். எதுவோ தேய்ந்து கட்டெறும்பாகி விட்டது என்பார்கள். அப்படி ஆகிவிட்டது அவர்கள் நிலையும்!*

*இப்போது 10,000 வாக்குகளை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இன்னும் இரண்டு மடங்கு வாக்குகளை அதாவது 20 ஆயிரம் வாக்குகளைக் கூடுதலாகக் கிடைத்தால்தான் கட்டுத் தொகையே திரும்ப வரும்! இந்த லட்சணத்தில்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் .... நாங்கள் முதல்வராக வந்தவுடன் .... என்று கொஞ்சமும் கூச்சம் இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.*

*ஆம், என்னைப் போன்றவர்கள், விக்கிரவாண்டியில் திமுகவின் வெற்றியை மட்டும் இல்லை, எங்கள் உயிரினும் மேலான தலைவர் கலைஞரைத் தவறான சொற்களால் பேசிய சீமான் கட்சியின் படுதோல்வியையும் சேர்த்தே கொண்டாடுகிறோம்!*

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## மனிதநேயர் புத்தர்!

அண்மையில் ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் பேசும்போது பிரதமர் மோடி "இந்தியா புத்தரைத் தந்துள்ளது. யுத்தத்தை அல்ல" என்று பேசியிருக்கிறார், மகிழ்ச்சி.

புத்தர் மனிதத்தை, மனித உறவுகளை மதித்தவர். யுத்தத்தை அவர் ஏற்கவில்லை, வெறுத்தார். ஏன்? யுத்தம் என்பது 'வன்முறை'.

ஆஸ்திரியாவுக்குச் சென்று புத்தரைப் பேசிய பிரதமருக்கு மணிப்பூர் வன்முறை ஏன் தெரியவில்லை?

மனிதத்தைப் பேசிய கல்புர்கி, கௌரி லங்கேஸ், 'தபோல்கர், ஸ்டேன் ஃபாதர் போன்றோர் உயிர்கள் வன்முறையால் பறிக்கப் பட்டனவே! இவற்றின் பின்னணியில் இருந்தது என்ன?

இது வன்முறை இல்லையா?

தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதும், மீன்கள் - வலைகளைப் பறிப்பதும், அழிப்பதும் அவர்களின் படகுகளைப் பறித்துவிட்டுச் சிறையில் அடைப்பதும் வன்முறை இல்லையா? ஆனால் மோடி அமைதிகாத்துக் கொண்டு இருக்கிறார்.

அண்மையில் கர்நாடக மாநிலம் விஜயபுரா தொகுதியின் பா.ஜ.க நாடாளுமன்ற தலித் உறுப்பினர் ரமேஷ் ஜிகாஜினாகி, மோடி அமைச்சரவையில் ஒரு தலித்துக்குக் கூட கேபினட் அமைச்சர் பதவி கொடுக்கவில்லை என்று ஒரு குற்றச்சாட்டை வைத்து இருக்கிறார்.

புத்தர் ஒடுக்கப்பட்ட உபாலி என்பவரை தலைமைத் துறவியாக ஆக்கினார். சுனந்தா என்ற தெருக்கூட்டும் பெண்ணை பவுத்தத்தில் சமத்துவம் கொடுத்துத் துறவியாக்கினார்.

புத்தர் பெயரைச் சொல்வதில் பெருமை இல்லை. அவரைப் போல நடக்க வேண்டும், அவரின் சொல்வழியாவது செயல்பட வேண்டும். இனியாவது பிரதமர் மோடி அப்படிச் செயல்படுவாரா?

புத்தர் புரட்சிவாதி, மதவாதியல்ல!போகிறபோக்கில் பேசுவதற்கு!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# கொட்டு முரசே... கொட்டு!

## காசு.நாகராசன்

2017 ஆம் ஆண்டு மோடி - எடப்பாடி கூட்டணியின் சதியால் நீட் தேர்வு தமிழ்நாட்டிற்குள் நுழைக்கப் பட்டபோது நீட்டுக்கு எதிரான தமிழ்நாட்டின் போராட்டம் என்பது தமிழ்நாட்டிற்காக மட்டுமல்லாது, இந்தியா முழுமைக்குமான எதிர்ப்பாகவே இருந்தது.

திராவிடமாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அமைக்கப்பட்ட நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையிலான நீட் ஆய்வுக்குழு அறிக்கை நீட் தேர்வை ஒட்டுமொத்தமாக சமூகநீதிக்கு எதிரான சூழ்ச்சித் திட்டம் என்றே அம்பலப்படுத்தியது.

இந்தியா முழுவதும் இன்றைக்கு அம்பலப்பட்டு, அசிங்கப்பட்டு நிற்கிற நீட் சூழ்ச்சித் தேர்வை மோடியரசு இனியும் காலதாமதமின்றி, மானவெட்கம் பாராமல் உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

பலியாகிக் கொண்டிருக்கிற எங்கள் பிள்ளைகளின் உயிரிழப்புகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நீட் தேர்வுக்கு எதிரான தனித் தீர்மானத்திற்குக் குடியரசுத் தலைவர் உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும், என்கிற முழக்கங்களோடு தமிழ்நாட்டின் நான்கு திசைகளிலும் 'திராவிட மாணவர் பேரவை' யின் மூலமாகப் போர்முழக்கம் செய்வதென திராவிட இயக்கத் தமிழர் பேரவை திருச்சியில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் திருச்சிப் பொதுக்குழுவில் தீர்மானம் இயற்றியிருக்கிறது.

அதன்படி, கல்விக்கண் கொடுத்த காமராசரின் பிறந்தநாளன்று , தமிழ்காக்கும் உரிமைப் போரில் தண்டவாளத்தில் படுத்துத் தலைகொடுக்கவும் துணிந்த தலைவர் கலைஞர் அவர்களின் கல்லக்குடிப் போராட்டம் நடந்த அதே ஜூலை 15 அன்று, சென்னை, கோவை, மதுரை, திருவாரூர் ஆகிய நான்கு நகரங்களிலும் நீட்டுக்கு எதிரான முழக்கங்கள் எழுப்பப்படுகின்றன.

மாணவர்கள், இளைஞர்கள் பெருந்திரளாய்ப் பங்கேற்று நீட் ஒழிப்புப் போராட்டத்தை வெல்லச் செய்வோம்!

"கட்டுத் தொலைந்ததென்று கொட்டு முரசே!" என்ற புரட்சிக் கவிஞரின் வரிகளுக்கு உயிர்கொடுப்போம்!!

# பேரவைப் பொதுச்செயலாளர் அறிவிப்பு!

திராவிட இயக்கத் தமிழர் பேரவை திருச்சிப் பொதுக்குழு முடிவின்படி பொறுப்பாளர்கள் நியமனப் பட்டியல் தொடர்ச்சி...

## மேற்கு மண்டலம்

### கிருஷ்ணகிரி மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் ஆனந்த் 9791865457.

மாவட்டச் செயலாளர்: தோழர் தினேஷ் 8124976659.

### தர்மபுரி மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் அறிவுடைநம்பி 9865979818

மாவட்டச் செயலாளர்: தோழர் இளம்பரிதி 8838943242.

மாவட்டப் பொருளாளர்: தோழர் இராவணன் 9787660757.

### சேலம் புறநகர் மாவட்டம்

மாவட்டத் தலைவர் : தோழர் வரதராஜன் 9942206266

மாவட்டச் செயலாளர்: தோழர் இரா.பா.சுந்தரவதனம் 9443824885

மாவட்டப் பொருளாளர்: தோழர் திராவிட அரசு 9566590082.

### சேலம் மாநகர் மாவட்டம்

மாவட்டத் தலைவர் : தோழர் திராவிட செல்வன் 9943850575

மாவட்டச் செயலாளர் : தோழர் ஜெகநாதன் 9597775521

மாவட்டப் பொருளாளர்: தோழர் சிவக்குமார் 9894996373

### ஈரோடு புறநகர் மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் தமிழ்மணி 9095608261.

மாவட்டச் செயலாளர்: தோழர் சரவண பெருமாள் 9500845667

மாவட்டப் பொருளாளர்: தோழர் அ.அருண் 9842351777.

### ஈரோடு மாநகர் மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் கு. சேகர் 9443229168.

மாவட்டச் செயலாளர்: தோழர் தமிழ்க் குமரன்: 9965127655.

மாவட்டப் பொருளாளர்: தோழர் சுந்தரமூர்த்தி: 9940829905.

### திருப்பூர் புறநகர் மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் தி.கண்ணப்பன் 9080920165.

மாவட்டச் செயலாளர்: தோழர் பிரகாசு 7904148848.

மாவட்டப் பொருளாளர்: தோழர் தென்றல் சேகர் 7402106813.

மாவட்ட அமைப்பாளர்: தோழர் நாகக் குமார் 9941003111

### திருப்பூர் மாநகர் மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் ஜெகன் 8610131745.

மாவட்டச் செயலாளர்: தோழர் முருகானந்தம் 9790057187.

### கோவை புறநகர் மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் சூலூர் சம்பத் 9600510150.

மாவட்டச் செயலாளர்: தோழர் தம்புராஜ் 9566724423.

மாவட்டப் பொருளாளர்: தோழர் பெரியார் சந்திரன் 9597480905.

### கோவை மாநகர் மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் காளப்பட்டி ஜெ. பி. 7502407216.

மாவட்டச் செயலாளர்: தோழர் ஆவை கோபிநாத் 9500817755

மாவட்டப் பொருளாளர்: தோழர் ஆர்மி சக்தி 9865411167.

தெற்கு மண்டலம் (விடுபட்டவை)

## தெற்கு மண்டலம்

### திண்டுக்கல் மாவட்டம்

தோழர் தமிழினியன்: மாவட்டத் தலைவர், திண்டுக்கல் கிழக்கு- 9942092499.

தோழர் கு.ஆனந்தராஜ்: மாவட்டச் செயலாளர், திண்டுக்கல் கிழக்கு- 9976790325.

தோழர் வே. நடராசன்: மாவட்டப் பொருளாளர், திண்டுக்கல் கிழக்கு- 9489722690.

தோழர் தமிழ் முத்து: மாவட்டத் தலைவர், திண்டுக்கல் மேற்கு- 9080963989.

தோழர் விடுதலை: மாவட்டச் செயலாளர், திண்டுக்கல் மேற்கு- 9486082744.

விடுபட்டப் பொறுப்பாளர்கள் பின்னர் அறிவிக்கப்படுவார்கள்.

**சிற்பி செல்வராஜ்,**
பொதுச் செயலாளர்,
திராவிட இயக்கத் தமிழர் பேரவை.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian